1970 நவம்பர் 28]

பரிசுச் சீட்டுக்களின் வரவு விற்பனை இவை குறித்த சரியான கணக்கு களை இனி எழுதிவராவிட்டால், எதிர்காலத்தில் ஏஜெண்டின் உரிமம் ரத்தாகுமென்று அவருக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

THIRU T. MARTIN : Sir, the Supreme Court has held in the R.M.D.C. Case which arose from the Mysore State that running of lotteries is not a trade or business but a gambling. That being so, even though there is no constitutional sanctity for the running of this gambling under the Constitution, may I know from the Hon. Chief Minister whether he would at least as a first step stop the entry of lottery tickets from other States to this State, exploiting the common people of our State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது இந்தப் பரிசுச் சீட்டு முறை இந்தியா முழுவதும் அநேகமாகப் பின்பற்றப்பட்டு வருகிற முறையாகும். எல்லா மாநிலங்களாலும் இந்த முறை பின் பற்றப்பட்டு வருகிறது. மராட்டிய மாநிலத்திலே மற்ற மாநிலங் களின் பரிசுச் சீட்டுகள் உள்ளே வரக்கூடாது என்று தடுக்கப்பட்டு இருக்கிறது. அதுபோல மற்ற மாநிலப் பரிசுச் சீட்டுகளை நாமும் தடுக்கலாமா அல்லது மராட்டிய மாநிலப் பரிசுச் சீட்டுகளை மட்டும் தடுக்கலாமா—ஏனென்றால் மராட்டியத்திலே நம்முடைய மாநில பரிசுச் சீட்டுகள் தடுக்கப்பட்டு இருக்கின்றன—என்பதை யோசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த மாநிலப் பரிசுச் சீட்டுகள் வெளி மாநிலங்களுக்குப் போகாமல் இருப்பதற்கு யோசனை எதுவும் இப் பொழுது இல்லை.

திரு. கே. விநாயகம் : இப்பொழுது பரிசுச் சீட்டுகள் விற்கிற விஷயத்திலே நம்முடைய மாநிலத்திலே எந்த இடத்திலே அதிகமாக விற்கிறது? நம்முடைய மாநிலத்தின் பரிசுச் சீட்டுகள் வெளி மாநிலங்களிலே அதிகமாக விற்கப்படுகின்றனவா? ஆகவே, என்ன ப்ரப்போர்ஷனிலே இந்த இரண்டு கேட்டகரிகளிலும் விற்கப்படு கின்றன என்பதற்குக் கணக்கு இருக்கிறதா? சமீபத்திலே 10 லட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டதாலே நம்முடைய மக்கள் எல்லாம் அதை வாங்கி ஆயிரக்கணக்கானவர்கள் ஏமாந்து போய் விடக்கூடிய நிலைமையிலே பஞ்சாபிக்காரருக்கு அந்தப் பணம் போய் சேர்ந்துவிட்டதாலே இங்கே எல்லாரும் ஏமாந்து போனார்கள் என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டுள்ள திரு. விநாயகம் அவர்கள் இப்படிப் பேசுவது நல்லதல்ல.

Rifle clubs in Madras

* 42 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of rifle club are so be started in Madras City ; and

(b) if so, the details thereof ?

[1970 நவம்பர் 28

மாண்புமிகு திரு. மு. கருணநிதி: (அ) சென்னை மாநகரில் ஏற்கனவே உள்ள துப்பாக்கிச் சுடும் பயிற்சி நிலையங்களைத் தவிர வேறு எதுவும் தொடங்க உத்தேசம் எதுவும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Mylapore Hindu Permanent Fund

* 47 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon the Minister for Labour and Backward Classes be pleased to state—

(*a*) whether there were any labour troubles in the Mylapore Hindu Permanent Fund during the early months of 1970;

(*b*) if so, he details thereof; and

(*c*) the action taken thereon?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) தொழிலாளர்களால் எந்தத் தொழில் தகராறும் எழுப்பப்படவில்லை. தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு எந்தப் புகார்களும் அல்லது முறையீடுகளும் செய்து கொள்ளப்படவில்லை.

(இ) & (உ) இவ்வினக்கள் எழவில்லை.

திருமங்கலம் பேரூராட்சி.

* 48 வின.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் பேரூராட்சி, நகராட்சியாக உயர்த்தப்படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) திருமங்கலம் பேரூராட்சியை ஓர் நகராட்சியாக மாற்றும் ஓர் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. ஆனல் மத்திய அரசின் மக்கட் தொகை கணக்கெடுப்பு அலுவலகம் தற்போது மக்கட் தொகை சம்பந்தப்பட்ட வேலைகளுக்காக ஓர் தடை விதித்து இருப்பதால், மாநில அரசு உடன் செயலாற்ற வேண்டி இராததும், அவசியமற்றதுமான செயற்குறிப்புகளை, தள்ளிவைக்குமாறு மாநில அரசை கேட்டுக் கொண்டமையால், திருமங்கலம் பேரூராட்சியை ஓர் நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பை, மாநில அரசு, தற்போதைக்கு தள்ளி வைத்துள்ளது. மத்திய அரசின் மக்கட்தொகை கணக்கெடுப்பு சம்பந்தப்பட்ட தடையை நீக்கின உடன் ஆவன செய்யப்படும்.

ரேஷன் கடை வியாபாரிகள்.

* 49 வின.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

ரேஷன் விதிகள் சரிவரப் பின்பற்றப்படவில்லை என்ற காரணத்துக்காக 1969-ம் ஆண்டு, ஜனவரி முதல் இதுவரை எத்தனை ரேஷன் வியாபாரிகளது லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டுள்ளது?